[8th August 1966

* 227 **கேள்வி.—திரு. ம. கமலநாதன் :** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பள்ளிகளுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் இலவச தண்ணீர் சப்ளை செய்யக்கூடாது என ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ராஜ்ய சர்க்கார் அண்மையில் கட்டளை இட்டிருக்கிறதா ?

(இ) ஆம் என்றால், அதற்கான காரணங்கள் யாவை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) ஆம் ; ஸ்தல ஸ்தாபனங்களுக்கு கீழ்க்கண்ட காரணங்களை முன்னிட்டு பள்ளிக் கூடங்களுக்கும் மருத்துவ மனைகளுக்கும் மற்ற ஸ்தாபனங்களுக் கும் தண்ணீர் இலவசமாக விநியோகிக்கக்கூடாது என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது. பெரும்பாலான தல அதிகார நிறுவனங்களின் நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை. எனவே, நகராட்சியில், பொது மக்களுக்குக் குடிநீர் வர்த்தக அடிப்படையில் வழங்கப்பட்டாலும், நீர்வழங்கு வேலைத் திட்டங்களைச் சரிவர நிறைவேற்றிப் பேணிவருவதற்கும், அதே சமயத்தில் அவ்வேலைத் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அரசாங்கத்திடமிருந்து பெற்ற கடன்களுக்கான ஆண்டுத் தவணைத் தொகைகளைச் செலுத்துவதற் கும் இத்தல அதிகார நிறுவனங்களால் இயலவில்லை. ஆகவே, பள்ளிகள், மருத்துவமனைகள், அறநிலையங்கள் போன்றவற்றிற்கு இலவசமாக நீர்வழங்கி, அதனால் அவை தங்கள் வருவாயை இழக்க முடியாத நிலையிலுள்ளன. மேலும், அவ்வாறு இலவசமாக நீர் வழங்க வகை செய்யும் ஏற்பாடு அதுவும் நீர்வழங்குவது குறித்த துணைவிதிகளில் இல்லை.

திரு. ம. கமலநாதன் : ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளி களுக்கும் ஆஸ்பத்திரிகளுக்கும் தண்ணீர் பெற கட்டணம் செலுத் திப் பெற முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, இலவசக் கல்வி கொடுக்கும் நிலையில் அரசாங்கம் தண்ணீரையும் இலவசமாக கொடுக்க ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : அந்த அளவுக்கு அரசாங்கத்திடம் பணம் இல்லாத காரணத்தால்தான் ஓரளவு கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : மருத்துவ மனைக்கு இலவசத் தண்ணீர் கிடைக்காத காரணத்தால், காலையில் இரண்டு மணி நேரம், மாலை யில் இரண்டு மணி நேரம் அளவுக்கே தண்ணீர் கொடுக்கப்படு வதால் சுகாதாரக் கேடான நிலைமை இருப்பதால் அரசாங்கம் இது பற்றிப் பரிசீலிக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தண்ணீர் வழங்கப் படுகிற நேரம் இரண்டு மணி என்றாலும் தாராளமாக வழங்கப்படு கிறது.

* 228 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to State—

(*a*) whether drinking water supply position in Ooty has become precarious; and

(*b*) if so, the action taken thereon ?

8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. சங்கரன் : நான் இக்கேள்வியை எழுப்பியபோது சுமார் மூன்று, நான்கு மாதங்களுக்கு முன்பு அப்போதுள்ள நிலை பற்றி கேட்டேன் . . . இப்போதுள்ள நிலை என்ன ?

கனம் சபாநாயகர் : உங்கள் பேரில் யாரும் குறை சொல்லவில்லை.

* 229 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for the Public Health be pleased to state—

(*a*) whether the Government are aware that Tiruchengode and Sankari taluks are in the grip of a serious water famine and that drinking water is being sold there from 12 paise to 15 paise per pot ; and

(*b*) if so, the measures proposed to relieve the said distress ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) சங்கரி, திருச்செங்கோடு தாலூகாக்களில் குடி நீர் தட்டுப்பாடு உள்ளது, கிராமங்களில் உள்ளவர்களுக்குக் குடி நீர் வசதி ஏற்படுத்துவதற்காக அங்குள்ள கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன.

திருச்செங்கோடு நகராட்சியிலும், சங்கரி நகரப் பஞ்சாயத்திலும் அவசியமான இடங்களில் கிணறுகள் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. தேவையானவர்களுக்கு லாரிகள் மூலமாகக் குடி நீர் இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றது.

***புலவர் கா. கோவிந்தன் :** திருச்செங்கோட்டில் பாராளுமன்ற இடைத்தேர்தல் நடந்தபோது அப்போது முதல் அமைச்சராக இருந்த திரு. காமராஜ் அவர்கள் குடிதண்ணீர் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள். அந்தத் திட்டம் இப்போது எந்த நிலையில் இருக்கிறது ? தேர்தல் நேரத்தில் பொது மக்களை ஏமாற்றுவதற்காக நடத்தப்பட்ட அடிக்கல் நாட்டு விழாதானு என்பதுபற்றி விளக்குவார்களா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ஏமாற்றுவதற்காக செய்யவில்லை. அங்குள்ளவர்களுக்கு குடிதண்ணீர் தாராளமாக வழங்கவேண்டுமென்றுதான் அடிக்கல் நாட்டப்பட்டது. ஆனால், அதன் எக்ஸ்பெண்டிசர் அதிகப்படியான காரணத்தினால், சமீபத்தில் ஏற்பட்ட பல ஆக்கிரமிப்புகள் காரணமாக ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

திரு. சோ. ஆறுமுகம் : ஒவ்வொரு வருடமும் திருச்செங்கோடு சங்கரி பகுதியில் இந்த குடிதண்ணீர் பஞ்சம் இருந்து கொண்டேயிருக்கிறது. ஆகவே, காவேரி ஆற்றிலிருந்து திருச்செங்கோட்டுக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டம் ஒன்று இருந்தது. அது என்னவாயிற்று? அங்கு ஒவ்வொரு கிராமத்திலும் இந்த குடிதண்ணீர் பஞ்சம் இருப்பதால் கிணறுகளை ஆழப்படுத்த ஏற்பாடு செய்வதாகச் சொல்லப்பட்டது. அதுபோல் இல்லை. சர்க்காரிடம்